[11th March 1959

இல்லை. விவசாயிகள் ரொம்ப வேண்டுமென்கிறார்கள். ரஷ்யாவிலே கூட சென்ட்ரல் டிராக்டர் ஆர்கனேஸேஷன் வேலை செய்வதிலே 10 வருஷம், 9 வருஷம் ஆயுள் காலம் என்று இருந்தாலும் 3 வருஷத்திற்குள் பிரயோசனமில்லாமல் போய்விடுகிறது என்று கருதி கூட்டுறவு சங்கங் களுக்குக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

Mr. SPEAKER : இந்தக் கேள்வி மீது உப கேள்வி போட அநேக அங்கத்தினர்கள் கைதூக்குகிறார்கள். கேள்வி நேரம் 9–30 மணிக்கு மேல் போனால் மான்யக் கோரிக்கை காலம் குறைந்து போய் விடும். ஆகையால் இதைப் பற்றி மான்யக் கோரிக்கை வரும்போது பேசவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் அனுமதி கொடுப்பது கஷ்டம் தான் என்று நினைக் கிறேன். அடுத்த கேள்வி.

[Sri S. M. Annamalai rose . . .]

Mr. SPEAKER : இன்னும் என்ன சொல்லப்போகிறீர்கள் ? இன்னும் பதிலளிக்க வேண்டிய கேள்விகள் 31 இருக்கின்றன. அதனால், நீங்கள் ஏதாவது சொல்லவேண்டுமானால் மான்யக் கோரிக்கையின் மீது பேசும்போது சொல்லலாம். மூலக் கேள்வி போட்ட கனம் அங்கத்தினர் ஏதாவது கேள்வி கேட்கவேண்டும் என்று சொன்னால், அதில் அர்த்தம் உண்டு. நீங்கள் எப்படிக் கேட்க முடியும் ? ஸ்ரீ கோவிந்தசாமி அவர்களே மேற்கொண்டு கேள்விகள் இதில் கேட்காமலிருக்கும்போது, அதற்குமேல் நீங்கள் சொல்லவேண்டுமானால் மான்யக் கோரிக்கையின்போது சொல்லுங்கள்.

Training centres in Carpentry

*** 700 *Q*.—Sri P. G. MANICKAM :** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷத்திலே கோயம்புத்தூர் ஜில்லாவில் தச்சுவேலை பயிற்சி கொடுப்பதற்காக சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வ ளவு ?

(ஆ) எந்தெந்த இடங்களிலே தச்சுவேலைப் பயிற்சி சாலைகள் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன ?

(இ) எத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது ?

(ஈ) இவர்களுள் எத்தனை பேர் ஹரிஜனங்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Rs. 27,980.

(*b*) Karadibavi, Pollachi and Periyanaickenpalayam.

(*c*) One hundred and forty-nine.

(*d*) Thirty-two.

Sri P. G. MANICKAM : ஹரிஜனங்களில் ஒரு சிலர்தான் இந்தப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப் படிப்பட்ட தொழிற் பயிற்சி அனேக ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டால் தான் பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேற்றம் அடைய முடி யும். ஆகையால், இப்படிப்பட்ட தொழிற் பயிற்சியிலே 50 சதவிகிதமாவது ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட சர்க்கார் கவனம் செலுத்துமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பயிற்சிக்கு வருகின்ற வர்களை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், நிர்ப்பந்தம் பண்ண முடியாது. 149 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. அதில் 32 பேர்கள் ஹரிஜன கள் என்ற தகவல் கொடுத்திருக்கிறேன். இன்னும் அதிகமான எண் ணிக்கையில் ஹரிஜன மக்கள் வந்தால் அவர்கள் எடுத்துக்கொள்ளப்படு வார்கள்.